بسم الله الرحمن الرحيم

# 1001 காபிர்களை முஸ்லிம்களாக்கிய உடும்பு! உடும்பின் மூலம் அண்ணலின் அற்புதம்!


தொகுப்பு

அஷ்ஷெய்க் மௌலவீ அல்ஹாஜ்

A. அப்துர் றஊப் (மிஸ்பாஹீ, பஹ்ஜீ



வெளியீடு

அகில இலங்கை ஸூபிஸ ஜம்இய்யதுல் உலமா

BJM. வீதி, காத்தான்குடி.06

தொலைபேசி : 06 22 45 625

14.04.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1001 காபிர்களை இஸ்லாமியர்களாக்கிய உடும்பு.

948 – حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَلِيِّ بْنِ الْوَلِيدِ الْبَصْرِيُّ، حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبْدِ الْأَعْلَى الصَّنْعَانِيُّ، حَدَّثَنَا مُعْتَمِرُ بْنُ سُلَيْمَانَ، حَدَّثَنَا كَهْمَسُ بْنُ الْحَسَنِ، حَدَّثَنَا دَاوُدُ بْنُ أَبِي هِنْدَ، عَنِ الشَّعْبِيِّ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ، عَنْ أَبِيهِ عُمَرَ بْنِ الْخَطَّابِ بِحَدِيثِ الضَّبِّ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ كَانَ فِي مَحْفَلٍ مِنْ أَصْحَابِهِ إِذْ جَاءَ أَعْرَابِيٌّ مِنْ بَنِي سُلَيْمٍ قَدْ صَادَ ضَبًّا , وَجَعَلَهُ فِي كُمِّهِ يَذْهَبُ بِهِ إِلَى رَحْلِهِ , فَرَأَى جَمَاعَةً , فَقَالَ: عَلَى مَنْ هَذِهِ الْجَمَاعَةُ؟ فَقَالُوا: عَلَى هَذَا الَّذِي يَزْعُمُ أَنَّهُ نَبِيٌّ , فَشَقَّ النَّاسَ ,

ثُمَّ أَقْبَلَ عَلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ , فَقَالَ: يَا مُحَمَّدُ , مَا اشْتَمَلَتِ النِّسَاءُ عَلَى ذِي لَهْجَةٍ أَكْذَبَ مِنْكَ وَأَبْغَضَ إِلَيَّ مِنْكَ , وَلَوْلَا أَنْ يُسَمِّيَنِي قَوْمِي عَجُولًا لَعَجِلْتُ عَلَيْكَ , فَقَتَلْتُكَ , فَسَرَرْتُ بِقَتْلِكَ النَّاسَ أَجْمَعِينَ , فَقَالَ عُمَرُ: يَا رَسُولَ اللَّهِ , دَعْنِي أَقْتُلْهُ , فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «أَمَا عَلِمْتَ أَنَّ الْحَلِيمَ كَادَ أَنْ يَكُونَ نَبِيًّا» , ثُمَّ أَقْبَلَ عَلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ,

فَقَالَ: وَاللَّاتِ وَالْعُزَّى , لَا آمَنْتُ بِكَ , وَقَدْ قَالَ لَهُ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: "يَا أَعْرَابِيُّ , مَا حَمَلَكَ عَلَى أَنْ قُلْتَ مَا قُلْتَ , وَقُلْتَ غَيْرَ الْحَقِّ , وَلَمْ تُكْرِمْ مَجْلِسِي؟ قَالَ: وَتُكَلِّمُنِي أَيْضًا اسْتِخْفَافًا بِرَسُولِ اللَّهِ، وَاللَّاتِ وَالْعُزَّى لَا آمَنْتُ بِكَ أَوْ يُؤْمِنَ بِكَ هَذَا الضَّبُّ , فَأَخْرَجَ الضَّبَّ مِنْ كُمِّهِ , وَطَرَحَهُ بَيْنَ يَدَيْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ , وَقَالَ: إِنْ آمَنَ بِكَ هَذَا الضَّبُّ آمَنْتُ بِكَ ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «يَا ضَبُّ» , فَتَكَلَّمَ الضَّبُّ بِلِسَانٍ عَرَبِيٍّ مُبِينٍ يَفْهَمُهُ الْقَوْمُ جَمِيعًا: لَبَّيْكَ وَسَعْدَيْكَ يَا رَسُولَ رَبِّ الْعَالَمِينَ , فَقَالَ لَهُ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «مَنْ تَعْبُدُ؟» قَالَ: الَّذِي فِي السَّمَاءِ عَرْشُهُ , وَفِي الْأَرْضِ سُلْطَانُهُ , وَفِي الْبَحْرِ سَبِيلُهُ , وَفِي الْجَنَّةِ رَحْمَتُهُ , وَفِي النَّارِ عَذَابُهُ، قَالَ: «فَمَنْ أَنَا يَا ضَبُّ؟» قَالَ: أَنْتَ رَسُولُ رَبِّ الْعَالَمِينَ , وَخَاتَمُ النَّبِيِّينَ، قَدْ أَفْلَحَ مَنْ صَدَّقَكَ , وَقَدْ خَابَ مَنْ كَذَّبَكَ ,

فَقَالَ الْأَعْرَابِيُّ: "أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ , وَأَنَّكَ رَسُولُ اللَّهِ حَقًّا , وَاللَّهِ لَقَدْ أَتَيْتُكَ وَمَا عَلَى وَجْهِ الْأَرْضِ أَحَدٌ أَبْغَض إِلَيَّ مِنْكَ , وَوَاللَّهِ لَأَنْتَ السَّاعَةَ أَحَبُّ إِلَيَّ مِنْ نَفْسِي وَمِنْ وَالِدِي , فَقَدْ آمَنَ بِكَ شَعْرِي وَبَشَرِي , وَدَاخِلِي وَخَارِجِي , وَسِرِّي وَعَلَانِيَتِي ,

فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَاكَ إِلَى هَذَا الدِّينِ الَّذِي يَعْلُو وَلَا يُعْلَى عَلَيْهِ , وَلَا يَقْبَلُهُ اللَّهُ إِلَّا بِصَلَاةٍ , وَلَا يَقْبَلُ الصَّلَاةَ إِلَّا بِقُرْآنٍ» , فَعَلَّمَهُ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: الْحَمْدُ لِلَّهِ، وَقُلْ هُوَ اللَّهُ أَحَدٌ , فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ , وَاللَّهِ مَا سَمِعْتُ فِي الْبَسِيطِ , وَلَا فِي الرَّجَزِ أَحْسَنَ مِنْ هَذَا , فَقَالَ لَهُ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «إِنَّ هَذَا كَلَامُ رَبِّ الْعَالَمِينَ , وَلَيْسَ بِشِعْرٍ , وَإِذَا قَرَأْتَ قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ مَرَّةً فَكَأَنَّمَا قَرَأْتَ ثُلُثَ الْقُرْآنِ , وَإِذَا قَرَأْتَ قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ مَرَّتَيْنِ فَكَأَنَّمَا قَرَأْتَ ثُلُثَيِ الْقُرْآنِ , وَإِذَا قَرَأْتَ قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ثَلَاثَ مَرَّاتٍ فَكَأَنَّمَا قَرَأْتَ الْقُرْآنَ كُلَّهُ» , فَقَالَ الْأَعْرَابِيُّ: نِعْمَ الْإِلَهُ إِلَهُنَا، يَقْبَلُ الْيَسِيرَ وَيُعْطِي الْجَزِيلَ ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ثُمَّ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «أَعْطُوا الْأَعْرَابِيَّ» , فَأَعْطَوْهُ حَتَّى أَبْطَرُوهُ , فَقَامَ عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ, فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ, إِنِّي أُرِيدُ أَنْ أُعْطِيَهُ نَاقَةً أَتَقَرَّبُ بِهَا إِلَى اللَّهِ عَزَّ وَجَلَّ دُونَ الْبَخْتِيِّ وَفَوْقَ الْأَعْرَابِيِّ وَهِيَ عُشَرَاءُ, فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ: «إِنَّكَ قَدْ وَصَفْتَ مَا تُعْطِي, وَأَصِفُ لَكَ مَا يُعْطِيكَ اللَّهُ جَزَاءً» قَالَ: نَعَمْ، قَالَ: «لَكَ نَاقَةٌ مِنْ دُرٍّ جَوْفَاءُ, قَوَائِمُهَا مِنْ زَبَرْجَدٍ أَخْضَرَ, وَعُنُقُهَا مِنْ زَبَرْجَدٍ أَصْفَرَ, عَلَيْهَا هَوْدَجٌ, وَعَلَى الْهَوْدَجِ السُّنْدُسُ وَالْإِسْتَبْرَقُ, تَمُرُّ بِكَ عَلَى الصِّرَاطِ كَالْبَرْقِ الْخَاطِفِ»,

فَخَرَجَ الْأَعْرَابِيُّ مِنْ عِنْدِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ, فَلَقِيَهُ أَلْفُ أَعْرَابِيٍّ عَلَى أَلْفِ دَابَّةٍ بِأَلْفِ رُمْحٍ وَأَلْفِ سَيْفٍ, فَقَالَ لَهُمْ: أَيْنَ تُرِيدُونَ؟ قَالُوا: نُقَاتِلُ هَذَا الَّذِي يَكْذِبُ, وَيَزْعُمُ أَنَّهُ نَبِيٌّ,

فَقَالَ الْأَعْرَابِيُّ: أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ, وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ, فَقَالُوا لَهُ: صَبَوْتَ؟ فَقَالَ: مَا صَبَوْتُ, وَحَدَّثَهُمْ بِهَذَا الْحَدِيثِ, فَقَالُوا بِأَجْمَعِهِمْ: لَا إِلَهَ إِلَّا اللَّهُ, مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ, فَبَلَغَ ذَلِكَ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ, فَتَلَقَّاهُمْ فِي رِدَاءٍ, فَنَزَلُوا عَلَى رُكَبِهِمْ يُقَبِّلُونَ مَا وَلَّوْا مِنْهُ, وَهُمْ يَقُولُونَ: لَا إِلَهَ إِلَّا اللَّهُ, مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ, فَقَالُوا: مُرْنَا بِأَمْرِكَ يَا رَسُولَ اللَّهِ, فَقَالَ: «تَدْخُلُوا تَحْتَ رَايَةِ خَالِدِ بْنِ الْوَلِيدِ» قَالَ: فَلَيْسَ أَحَدٌ مِنَ الْعَرَبِ آمَنَ مِنْهُمْ أَلْفٌ جَمِيعًا إِلَّا بَنُو سُلَيْمٍ، (المعجم الصغير للطبراني)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1001 காபிர்களை முஸ்லிம்களாக்கிய உடும்பு!
# உடும்பின் மூலம் அண்ணலின் அற்புதம்!

ஒரு நாள் நபீ அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் ஓர் இடத்தில் தோழர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் இரண்டாவது "கலீபா" உமர் றழியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்களும் இருந்தார்கள்.

அவ்வேளை அங்கு வந்த கிராமவாசியான ஓர் அறபீ - காட்டறபீ - இவர் "பனூஸுலைம்" கூட்டத்தைச் சேர்ந்தவர். இந்தக் கூட்டம் யார்? யார் தலைமையில் கூடியுள்ளதென்று வினவினான். அதற்கு அங்கு நின்றிருந்த சிலர் (இவர்கள் வந்தவர் போன்ற காபிர்களாயிருந்தனர்) தன்னை நபீ என்று கருதுகின்ற ஒருவரின் தலைமையில் கூடியுள்ள அவரின் தோழர்கள் என்று கூறினர்.

வந்த அந்த அறபீ ஒரு வேட்டைக்காரன். அவன் ஓர் உடும்பை வேட்டையாடி அதைக் கையில் எடுத்து வந்திருந்தான். அவன் அங்கு கூடியிருந்த குழுவிடம் வந்து நபீகள் பெருமானின் பெயரை மட்டும் சொல்லி அழைத்து, பேசக் கூடியவர்களில் உங்களைவிடப் பொய்யரையும், எனக்கு மிக கோபமானவரையும் பெண்கள் சுமக்கவில்லை. என்னுடைய சமுகத்தவர்கள் எனக்கு அவசரக் காரன் என்று பெயர் வைக்கவில்லையானால் உங்கள் மீது விரைவாக செயற்பட்டு கொலை செய்திருப்பேன். உங்களைக் கொலை செய்வதன் மூலம் அனைத்து மனிதர்களையும் சந்தோஷப்படுத்தியுமிருப்பேன் என்று சொன்னான். இதைக் கேட்ட அங்கிருந்த வீரர் உமர் றழியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள், அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் இவனைக் கொல்வதற்கு அனுமதி தாருங்கள் என்றார்கள். நபீ பெருமான் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அனுமதி வழங்காமல் பின்வருமாறு கூறினார்கள்.

உமரே! இரக்கமானவரல்லவா உங்கள் நபீ என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள்.

அவ்வேளை அந்தக் காட்டறபீ பெருமகனார் பெருமானாரை முன்னோக்கி "அல்லாத், அல் உஸ்ஸா" என்ற எங்களின் விக்கிரகங்களின் மீது சத்தியமாக! நான் உங்களைக் கொண்டு "ஈமான்" விசுவாசம் கொள்ளமாட்டேன். நான் வேட்டையாடி வந்த இந்த உடும்பு உங்களைக் கொண்டு நம்பும்வரை என்று வீறாம்பு பேசியவனாக தனது கையிலிருந்த உடும்பை பெருமானாருக்கு முன்னால் தூக்கி எறிந்துவிட்டு இது ஈமான் கொண்டால் நானும் ஈமான் கொள்வேன் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் வீர, வீறாம்பு வார்த்தைகளைக் கேட்டு சற்றும் அசையாத சங்கை நபீ அவர்கள் "யா ழுப்பு" உடும்பே என்றார்கள். வேறொன்றும் சொல்லவில்லை. அவ்வளவுதான். அறபு மொழியிலோ, எந்த மொழியிலோ ஒரு சொல் கூட பேசத் தெரியாத அந்த உடும்பு சரமாரியாகவும், அழுத்தம் திருத்தமாகவும், நாகரிக மொழியிலும், அங்கு கூடியிருந்த அனைவரும் விளங்கும் பாணியில் பேசத் தொடங்கியது.

"அல்லாஹ்வின் திருத்தூதரே! உங்களுக்கு அடிபணிந்தேன். தலை சாய்த்தேன்" என்றது.

நீ எதை வணங்குகிறாய்? என்று பெருமானார் கேட்டார்கள். அதற்கு அந்த பகுத்தறிவில்லாத உடும்பு, எவனின் "அர்ஷ்" மேலே இருக்கிறதோ, எவனின் ஆட்சி பூமியில் உள்ளதோ, எவனின் பாதை கடலில் உள்ளதோ, எவனின் அருள் சுவர்க்கத்தில் உள்ளதோ, எவனின் வேதனை நரகத்தில் உள்ளதோ அவனையே வணங்குகிறேன் என்று அது சொன்னது.

அவ்வேளை பெருமானார் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் அதனிடம் நான் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அந்த உடும்பு, "நீங்கள் உலகத்தாரின் றப்பாகிய அல்லாஹ்வின் திருத்தூதர் நபீமார் அனைவரின் தலைவர், உங்களை உண்மைப்படுத்தி நம்பினவன் வெற்றி பெற்றான். உங்களைப் பொய்யாக்கி நம்பாதவன் தோல்வி கண்டான்" என்று சொன்னது.

இதை நேரில் செவியேற்றுக் கொண்டு வியப்பால் வியர்த்துப் போய் நின்ற காட்டறபீ வேட்டைக்காரன் அல்லாஹ் தவிர வேறொன்றுமில்லை என்றும், நீங்கள் உண்மையிலேயே அல்லாஹ்வின் திருத்தூதர்தான் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன். நம்புகிறேன் என்றும், அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களிடம் நான் வரும்போது இந்தப் பரந்த பூமியில் உள்ள மக்களில் உங்களை விட எனக்கு கோபமான ஒருவரும் இல்லாத நிலையிலேயே வந்தேன். ஆனால் அல்லாஹ்வின் மீது சத்தியமாக இன்று நீங்கள் எனக்கு என்னைவிட, எனது மக்களை விட நேசமுள்ளவர்களாக ஆகிவிட்டீர்கள். நிச்சயமாக இன்று நான் மட்டும் உங்களை நம்பவில்லை. நானும், என்னிலுள்ள முடிகளும், என் உடலும், எனது உள்ளும், வெளியும், எனது எல்லாமே உங்களை நம்பிவிட்டன என்று கூறி இஸ்லாமில் இணைந்தார். நெருப்பிலிருந்து நீருக்கு வந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை நபீ அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் இந்த மார்க்கத்திற்கு உனக்கு நல்வழி காட்டிய அல்லாஹ்வுக்கு எல்லாப் புகழும், இந்த மார்க்கம் உயர்ந்து கொண்டே போகும். இதைவிட வேறு எந்த மார்க்கமும் உயராது என்று அல்லாஹ்வைப் புகழ்ந்து அதன்பின் ஓர் அடியானை தொழுகையின்றி அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்றும், திருக்குர்ஆன் இன்றித் தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான் என்றும் கூறினார்கள்.

அப்போது அந்த அறபீ எனக்கு கற்றுத் தாருங்கள் என்று கேட்டார். அதற்கு நபீ அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் அவருக்கு "பாதிஹா" ஸூறாவையும், "இக்லாஸ்" குல்ஹுவல்லாஹு ஸூறாவையும் கற்றுக் கொடுத்தார்கள். அப்போது அவர் அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் எங்குமே இதைவிட அழகான ஒன்றைக் கேட்கவே இல்லை என்று கூறினார்.

அப்போது நபீ பெருமான் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் இது றப்புல் ஆலமீன் - உலக மக்களின் இரட்சகனான அல்லாஹ்வின் பேச்சு. இது கவியல்ல. நீங்கள் "குல் ஹுவல்லாஹு அஹத்" என்ற ஸூறாவை - அத்தியாயத்தை ஒரு தரம் ஓதினால் திருக்குர்ஆனின் மூன்றில் ஒன்றை ஓதியவர் போலாவீர்கள். அதை இருமுறை ஓதுவீர்களாயின் திருக்குர்ஆனின் மூன்றில் இரண்டை ஓதியவர் போலாவீர்கள். அதை மூன்று தரம் ஓதுவீர்களாயின் திருக்குர்ஆனை முழுமையாக ஓதியவர் போலாவீர்கள் என்று கூறினார்கள்.

அப்போது அந்த தோழரான அறபீ "எங்கள் இறைவன் கொஞ்சத்தை ஏற்றுக் கொண்டு அதிகத்தைக் கொடுப்பான் - சிறியதை ஏற்றுக் கொண்டு பெரியதைக் கொடுப்பான்" என்று கூறினார்.

பின்பு நபீ பெருமான் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் அந்த தோழரான அறபியிடம் பணம் - சொத்து உண்டா? என்று வினவினார்கள். அதற்கவர் "பனூ ஸுலைம்" கூட்டத்தில் என்னைவிட ஏழை யாருமில்லை என்றார். அப்போது நபீ பெருமான் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தங்களின் அங்கு சமூகம் தந்திருந்த ஏனைய தோழர்களுக்கு அவருக்கு கொடுங்கள் என்றார்கள். தோழர்கள் அவர் எதிர்பார்த்திராத அளவு கொடுத்தார்கள். அவ்வேளை அங்கு வந்திருந்த தோழர்களில் பெரும் செல்வந்தரான அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தபூக் யுத்த நேரம் தனக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்து மாத கர்ப்பமுள்ள ஒட்டகம் தருவதாக கூறினார்கள். அப்போது நபீ அலைஹிஸ்ஸலாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்ஸலாம் அவர்கள் அவரிடம் நீங்கள் கொடுப்பது பற்றிச் சொன்னீர்கள். அதற்காக அல்லாஹ் உங்களுக்குத் தரவுள்ள நற்கூலி பற்றி நான் சொல்கின்றேன் என்றார்கள். நல்லது சொல்லுங்கள் அல்லாஹ்வின் றஸுலே! என்றார்கள் நபீ தோழர் அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள். பெருமானார் அவருக்கு கிடைக்கவுள்ள நற்கூலி பற்றி பின்வருமாறு விபரித்தார்கள்.

உங்களுக்கு வெள்ளை முத்தினாலான, விசாலமான ஓர் ஒட்டகம் உண்டு. அதன் கால்கள் பச்சை இரத்தினங்களால் ஆனவை. அதன் இரு கண்களும் சிவந்த மாணிக்கத்தினால் ஆனவை. அதன் மேல் ஒரு சிம்மாசனம் இருக்கும். அதன் மீது பட்டு இன வகைகள் இருக்கும். அது உங்களை ஏற்றிக் கொண்டு "ஸிறாத்" - பாலத்தை மின்னல் வேகத்தில் கடக்கும் என்றார்கள்.

இவற்றையெல்லாம் செவியேற்று வயிறு நிறைந்த நபீ தோழர் காட்டறபீ அங்கிருந்து விடைபெற்று வெளியேறி வருகையில் ஆயிரம் வாள்களோடு ஆயிரம் குதிரைகளில் ஆயிரம் காபிர்களான அறபிகளைக் கண்டு நீங்கள் அனைவரும் ஆயுதங்களுடன் எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கவர்கள் தன்னை நபீ என்று பொய் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவரைக் கொன்றொழிக்கச் செல்கிறோம் என்றார்கள்.

அப்போது நபீத் தோழர் காட்டறபீ "அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸுலுல்லாஹ்" என்று சொன்னார். இது கேட்டு வியந்த ஆயிரம் வீரர்களும் நீயும் மாறிவிட்டீரா என்று வியந்தவர்களாக அவரிடம் கேட்டார்கள்.

அந்த நபீ தோழரான அன்று இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட காட்டறபீ தனக்கு நடந்த நிகழ்வை அவ்வாறே அவர்களிடம் எடுத்துக் கூறினார். ஆயிரம் வீரர்களும் தமது ஆயுதங்களைத் தூக்கியெறிந்து விட்டு அண்ணலெம் பெருமானை நோக்கி அவர்களைக் கண்டு சுபச் செய்தி பெறும் நோக்கத்தில் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி படையெடுத்தனர். அண்ணல் அவர்களைக் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கி அண்ணலே! நாங்கள் என்ன செய்ய வேண்டும். ஏவுங்கள் செய்கிறோம் என்று முழங்கினர்.

பெருமானார் அவர்களிடம் தோழர் காலித் இப்னு வலீத் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் கொடியின் கீழ் நீங்கள் அனைவரும் அலை திரளுங்கள் என்று பணித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்களின் வாழ்வில் ஆயிரத்து ஒருவர் ஒரே நேரத்தில் இஸ்லாம் மார்க்கத்தில் இணைந்து கொண்டது இந்த நிகழ்வு மாத்திரமே! அண்ணலெம் பெருமானின் "முஃஜிஸத்"தின் (அற்புதத்தின்) மகத்துவத்தை, அதன் அகமியத்தை நான் என்னென்று சொல்வேன்! ஸுப்ஹானல்லாஹ்! இதோடு வரலாறு நிறைவு பெற்றது.

## எனது வேண்டுதல்.

அண்ணலே! ஆன்மிக அரு மருந்தே! உங்கள் பாதணியைக் கண்ணால் கண்டும் கூட அதை என் தலைமேல் வைக்கும் பாக்கியமிழந்துவிட்டேன் யா ஹபீபல்லாஹ்! எனதூர் அறிய, இலங்கை நாடறிய, அகில ஆலங்களுமறிய, நான் செய்த பாவங்களுக்காக உங்களிடம் பாவ மன்னிப்புக் கேட்டு நிற்கிறேன். யா ஹபீபல்லாஹ்!

உங்களின் உறைவிடமாம் திரு மதீனா நகருக்கு முதன் முதலாக நான் வந்து பாதம் பதித்த மறு நாளிரவே என் கண்களைப் பிடிங்கியெறிந்து அந்தக் கண்களால் வேறொன்றையும் காணாத அந்தகனாக நான் ஆகியிருக்க வேண்டும் யா ஹபீபல்லாஹ்! நான் நஸீபற்ற பாவியாகிவிட்டேன் யா ஹபீபல்லாஹ்! எனக்கு உங்களின் திருக்கரம் தந்து என் பாவங்களை எரித்துச் சாம்பலாக்க உங்களுக்கு மனமில்லையா? யா ஹபீபல்லாஹ்!

உங்கள் சாச்சா ஹம்ஸா நாயகத்தின் வயிற்றைப் பிழந்து அவர்களின் ஈரலைக் கடித்து அதைச் சப்பித் துப்பினாளே ஹிந்தா அவளை மன்னித்த உங்களால் ஏன் நாயகமே என்னை மன்னிக்க முடியாது யாஹபீபல்லாஹ்! என்னை மன்னியுங்கள் நாயகமே! நாதாவே!

எழுபத்தேழைத் தாண்டி நிற்கும் இவ்வேழையின் முகத்தை ஒரு நொடி நேரம் பார்த்தால் போதும் யா ஹபீபல்லாஹ்! என் பாவங்கள் ஆதவனைக் கண்ட பனிக்கட்டிகள் கரைவது போல் கரைந்து போகுமே யா ஹபீபல்லாஹ்!

ونظرة منك تكفيني على جرائمي ومعاصي وذنوبي ومُخالفتي يا حبيب الله!

وقطرةٌ من سُؤرِ شرابك تنفي أدْرَانَ مَعَاصي من قلبي يا حبيب الله!

وأكرمني بحَمْلِ نعليك على رأسي وصدري ولو لحظةً يا حبيب الله!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وقلتَ يا سيّد السادات "بُعثتُ لأُتمِّمَ مكارمَ الأخلاق" فتَمِّمْ أخلاقي يا حبيب الله!

قال حفيدك القطب الأكبر أبو الحسن علي الشّاذلي قُدّس سرّه لو حُجب عنّي رسولُ الله طرفةَ عينٍ ما كنتُ من جملة الإسلام زُمرةِ زَين، فأسعِدني بكَشْفِ حُجُبي كلّها كما كَشَفْتَ حُجُبَ حفيدك لكي أرى مُحيّاك المبارك المُشبّه بالبدر مرّة ثانية يا حبيب الله!

ورَدِّنِيْ بِرِداءِ المحبّة فيك لأصيرَ مُحِبًّا لك مُخلصا يا حبيب الله!

أثقالُ معاصي قَصَمتْ ظَهرِي وَخَاصِرَتِيْ، فأَنْزِلها عنّي يا حبيب الله!

يا سيّدي ويا قُرّةَ عيني ويا ثمرةَ فُؤادي ويا قطعةَ كَبِدي أنت بحر أنوار ربّك، فرُشَّ عليَّ ولو قطرةً صغيرةً من أنوار ذلك البحر،

وأنت يا سيّدي مَعْدِنُ أسرار ربّك، فخُصَّنِيْ ولو بِسِرٍّ واحد من تلك الأسرار،

وأنت يا سيّدي لِسانُ حُجَّة ربّك، فاجعل لي لسانًا ينطق بحُجَّةِ ربّك،

أنت يا سيّدي أطعتَ ربّك فيما أمرك به، وأطاعك ربّك فيما سألته فأعطاك مسئلتَك، فأعطني مسئلتي يا حبيب الله!

أنت قرّة عيني كما أنت قرّة عين ربّك، فأقرَّ عيني وقلبي بإظهار مُحيّاك في منامي ويقظتي يا حبيب الله!

يا سيّدي يا روحي وروحَ الكونين وعينَ الثّقلين! قد ضَيَّقَ أعدائي أرضَك أرضَ ربِّك عليّ بما رحبت ووَسِعَتْ فوسّعها عليَّ حتّى أمشي عليها آمنا وسالما يا حبيب الله!

يا حبيبَ ربِّ قال تبارك الّذي بيده الْمُلْكُ، فأعطني مُلكا لأظْهَرَ به ولِأُظْهِرَ به حقيقَتَك وأسرار ربّك بين العباد يا حبيب الله!

يا حبيبي وحبيبَ ربّ العالمين مَكِّنِّيْ ناصِيَةَ كلِّ جَبَّارٍ عَنِيْدٍ وَشَيْطَانٍ مَرِيْدٍ يا حبيب الله!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يا ثمرةَ فؤادي يا ناصري يا حبيب الله! ادع الله لي أن يتجلّى اللهُ باسـمَيْه الغَنيّ والمغني لخدمة دينه ولبناء مبنى الجامع البدري يا رحمة للعالمين، ويا شـفيع المذنبين، ويا راحة العاشـقين، ويا من مات موتا مجازيّا لا حقيقيًا، وأنت يا حبيب الله حبيبٌ لِحَيٍّ لا يموت، فكيف يـرضى حبيبُك بموت حبيبِه؟ يا حبيب الله!

يا حبيب الله! ويا مُنقذَ من غرِقَ فى بحـر المِحَنِ أَنْقِذْ قوما وقعوا فى بحـر المحن، وخذ يا حبيب الله بأيديهم واهدهم إلى العقيدة السـنيّة والعقيدة الصـوفيّة إن كان لهم نصـيب من الجنّة، أو من كأس الواصلين، أختم شكايتي مُقبِّلا قَدَمَيْكُمْ ونعليكم ووجنتيكم وجميع جسـمكم الشريف المبارك يا رحمة للعالمين! ويا رحيم! ويا رؤوف!

யா ஹபீபல்லாஹ்! உங்களின் அருட்பார்வை ஒன்று மட்டுமே எனது பாவங்கள், குற்றங்கள், தவறுகள் அனைத்திற்கும் போதும் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! நீங்கள் குடித்து எஞ்சிய பானத்தின் ஒரு துளி என்னுள்ளத்தை தாக்கிய பாவக் கறைகளை அகற்றிவிடுமே! யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! தங்களின் பாதணியை என் தலை மீதும், என் நெஞ்சு மீதும் ஒரு நொடி நேரமேனும் சுமந்து நான் சங்கை பெற அருளுங்கள் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்!ஸாதாத்மார்களின் தலைவரே! உயர் குணங்களைப் பூரணப்படுத்துவதற்காக நான் அனுப்பி வைக்கப்பட்டேன் என்று அருளிய அண்ணலே! எனது குணங்களைப் பூரணப்படுத்துங்கள் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! உங்களின் வழி வந்த உங்களின் பேரர் அபுல் ஹஸன் அலீ அஷ்ஷாதுலீ நாயகம், கண் இமைக்கும் நேரம் எனக்கும், என் பாட்டனார் றஸூலுல்லாஹ்வுக்குமிடையில் திரை ஏற்பட்டால் நான் முஸ்லிமாக இருக்கமாட்டேன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்களே. அதேபோல் எனது மனத்திரைகளை அகற்றி நானும் பூரண நிலவிற்கு நிகரான உங்களின் ஒளி முகம் மீண்டும் ஒரு முறை காண அருள் செய்யுங்கள் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! "மஹப்பத்" எனும் போர்வையால் என்னைப் போர்த்தி நான் உங்களின் பரிசுத்த நேசனாய் மாற அருளுங்கள் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! பாவமெனும் சுமைகள் என் முதுகையும், இடுப்பையும் ஒடித்துவிட்டன. அவற்றை இறக்கி வைத்து அருள் புரியுங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் தலைவரே! என் கண் குளிர்ச்சியே! என் இதயக்கனியே! என் ஈரல் குலையே! நீங்கள் உங்கள் றப்பின் ஒளிக்கடல். அந்தக் கடலின் ஒரு சிறு துளியையேனும் என் மீது தெளித்து அருள் புரியுங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் தலைவரே! என் ஸெய்யிதே! நீங்கள் உங்கள் றப்பின் இரகசியங்களின் விளைவிடமாக உள்ளீர்கள் யா ஹபீபல்லாஹ்! அந்த இரகசியங்களில் ஓர் இரகசியத்தைக் கொண்டேனும் என்னைச் சொந்தமாக்கி வையுங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் தலைவரே! நீங்கள் உங்கள் றப்பின் ஆதார நாவாக உள்ளீர்கள் யா ஹபீபல்லாஹ்! எனக்கும் உங்கள் றப்பின் ஆதாரத்தை பேசும் நாவைத் தாருங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் தலைவரே! யா ஹபீபல்லாஹ்! நீங்கள் றப்பின் கட்டளைக்கு அடி பணிந்தீர்கள். உங்களின் றப்பு நீங்கள் அவனிடம் கேட்டதற்கு இணங்கி நீங்கள் கேட்டதை உங்களுக்கு வழங்கினான். எனக்கு என் தேவையை வழங்குங்கள் யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! நீங்கள் அல்லாஹ்வின் கண் குளிர்ச்சியாக இருப்பது போல் தாங்கள் எனது கண் குளிர்ச்சியாக உள்ளீர்கள் யா ஹபீபல்லாஹ்! ஆகையால் என் கனவிலும், விழிப்பிலும் உங்களின் திருமுகக் காட்சி தந்து என் கண்களையும், கல்பையும் குளிர்ச்சியாக்கி வையுங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் தலைவரே! என் உயிரே! ஈருலகின் உயிரே! மனு, ஜின்களின் கண்ணே! எனது எதிரிகள் உங்களின் றப்பின் இப்பரந்து விரிந்த இப்பூமியை என் மீது இறுக்கமாக்கி நெருக்கமாக்கி வைத்து விட்டார்கள் யா ஹபீபல்லாஹ்! ஆகையால் அந்தப் பூமியை எனக்கு விரிவாக்கி, விசாலமாக்கி அச்சமற்றவனாயும், ஈடேற்றம் பெற்றவனாயும் அதில் நான் பாதம் பதித்து நடக்க அருள்புரியுங்கள் யா ஹபீபல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவன் கையில் ஆட்சியதிகாரம் உள்ளதோ அவன் உயர்த்தியாகிவிட்டான் என்று கூறிய றப்பின் ஹபீபே! நான் வெளியாவதற்கும், உங்களின் எதார்த்தத்தையும், உங்களின் றப்பின் இரகசியங்களையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்கும் எனக்கு ஆட்சியதிகாரம் தந்தருள்புரியுங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் ஹபீபே! உலக மக்களின் றப்புடைய ஹபீபே! சர்வாதிகாரிகளினதும், ஷெய்தான்களினதும் முன் நெற்றி முடிகளை எனக்கு வசப்படுத்தி தாருங்கள் யா ஹபீபல்லாஹ்!

என் இதயக் கனியே! எனக்குதவும் அல்லாஹ்வின் ஹபீபே! எல்லாமாயுமுள்ள அல்லாஹ் என் மீது அவனின் ஙனீ, முங்னீ எனும் இரு நாமங்கள் கொண்டும் "தஜல்லீ"யாவதற்கு - வெளியாவதற்கு இறைவனிடம் கையேந்துங்கள் யா ஹபீபல்லாஹ்! இது அல்லாஹ்வின் தீனுக்கு - மார்க்கத்திற்கு பணி செய்யவும், பத்ரிய்யா ஜுஂம்ஆப் பள்ளிவாயலை கட்டி முடிக்கவும் உதவுமே யாறஹ்மதன் லில் ஆலமீனே! உலக மக்களின் அருட் கொடையே! பாவிகளுக்குப் பரிந்துரைப்பவர்களே! காதலர்களின் நிம்மதியே! எதார்த்தத்தில் மரணிக்காமல் வெளிப் பார்வையில் மரணித்தவர்களே! தாங்கள் யா ஹபீபல்லாஹ்! மரணிக்காத உயிருள்ளவனின் ஹபீபாக உள்ளீர்கள். அத்தகையோன் நீங்கள் மரணிப்பதை எவ்வாறு விரும்புவான்? பொருந்திக் கொள்வான்? யா ஹபீபல்லாஹ்!

யா ஹபீபல்லாஹ்! சோதனைகள் எனும் கடலில் மூழ்கியோனை ஈடேற்றமாக்கும் யா ஹபீபல்லாஹ்! சோதனைக் கடலில் ஒரு கூட்டம் மூழ்கிவிட்டார்கள். அவர்களைக் காப்பாற்றுங்கள் யா ஹபீபல்லாஹ்! அவர்களின் கை பற்றி அவர்களை ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் பக்கமும், ஸூபிஸக் கொள்கையின் பக்கமும் வழி காட்டுங்கள் யா ஹபீபல்லாஹ்! அவர்களுக்கு சுவர்க்கத்தில் அல்லது இறைஞான மகான்களின் பானத்தில் நஸீப் இருக்குமானால் இவ் உதவியை செய்யுங்கள் யா ஹபீபல்லாஹ்!

எனது இவ் வேண்டுகோள்களை - முறையீட்டை உங்களின் இரு பாதங்களையும், இரு பாதணிகளையும், அருள் நிறை கன்னங்களையும், அருள் மேனி முழுவதையும் முத்தமிட்டவனாக முடிக்கிறேன். யா றஹ்மதன் லில் ஆலமீன்! யா றஹீம்! யா றஊப்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலே உள்ள படத்தில் நீங்கள் காண்பது காத்தான்குடி-5 பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலின் புதிய கட்டிடத் தோற்றமாகும்.

அகில இலங்கை "ஸுன்னத் வல் ஜமாஅத்" கொள்கைவாதிகளினதும், "தரீகாவாதி"களினதும் பிரதான தலமாக விளங்கும் பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலின் நான்காவது தட்டுக்கான "கொன்க்ரீட்" வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

எனவே, இலங்கை, மற்றும் வெளிநாடுகளிலுள்ள ஸுன்னத் வல் ஜமாஅத், ஸுபிஸ கொள்கைவாதிகள் இலங்கைத் தாய்த் திரு நாட்டில் ஸுபிஸம் மேலோங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு இப்பள்ளிவாயலை குறுகிய காலத்தினுள் கட்டி முடிக்க தம்மால் முடிந்த நிதியுதவிகளை செய்வதுடன், ஏகமாய்க் காட்சியளிக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இரு கரமேந்துமாறும் அன்பாய் வேண்டிக் கொள்கின்றேன்.

- காதிமுல் கவ்மி -

<u>தொடர்புகளுக்கு</u>
பொருளாளர்
பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல்
BJM வீதி, காத்தான்குடி-5
065 22 45 625
077 91 85 192

<u>பணம் அனுப்ப :</u>
**People's Bank - Kattankudy**
**Badhriyyah Jumah Mosque**
**AC : 065100120000937**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org